~~[illegible]~~ :- வாழ்வு பறந்தோம்' [illegible]

"மணவாழ்க்கையின் - ஆரம்பத்தில்! எத்தனை பேர்; கவலை காதலன் உள்ள பரிவுள்ள ஸௌந்தர்யத்தையும், ஒப்பற்ற கனிவையும் அன்றோ வாழ்க்கையில் அப்படியே எதிர்பார்த்தால் ஏமாற்ற கேட்படாமல் என்ன செய்யும்." ***

"வாழ்க்கையின் வாழ்வும் தாழ்வும் சந்தர்ப்பத்தைப் பொறுத்தன; சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதை பொறுத்தன. சந்தர்ப்பம் மிக மிக முக்கியமான ஒன்று. சந்தர்ப்பத்துக்கேற்றபடி அறிவைப் பயன்படுத்திக் கொள்வதுதான் அனுபவம். அப்படிப் பயன் படுத்திக் கொள்ளத் தெரிவதற்கு - அனுபவத்திற்கு முக்கியமாய் வேண்டுவது நிதானிக்கும் திறமை. ***

"நன்கு படித்தவர்களெல்லாம்; திறமை யுடையவர்களெல்லாம்; அறிவாளிகளெல்லாம்; ஆற்றலுள்ளவர்களெல்லாம்; பொறுமைசாலி யானவர்களெல்லாம்; அபார உழைப்பாளிகளெல்லாம்; ஆனால், மகத்தான [illegible] நிறைந்தும்; மற்றவர்களை நிதானித்து எடைபோட்டுப் பார்க்கும் திறமையில்லாவிட்டால், பிரயோஜனமில்லை. பொதுவிலிருந்தால் பொதுவே போனால் சதா மற்றவர்களோடு பழக வேண்டி யிருக்கிறது. யார் யார் எப்படி பட்டவர், எதற்காக நம்மிடம் வருகிறார், நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார், அவரிடமிருந்து என்ன பெறலாம், அவர் நல்லவரா, கெட்டவரா, நம்பக்கூடியவரா, இல்லையா - என்ற விஷயங்களை சட்டென்று ஆளைப் பார்த்த மாத்திரத்திலே நிதானித்து எடைபோடக் கூடியவர்களே வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். ஆளை ஆள் சரியாய் நிதானிக்க தெரியாததாலேதான் வாழ்க்கையில் எத்தனை குழப்பங்களும், மோசடியும், ஏமாற்றமும், சந்தேகங்களும், துயரங்களும் உண்டாகின்றன". ***

"நிதானிக்கும் சக்தி சிலருக்கு இயல்பாகவே அமைந்து விடுகிறது. சிலர் அடிபட்டு கற்றுத் தேர்ந்துவிடுகிறார்கள். சரியான அநுபவசாலி, தன்னைப் பற்றியும், பிறரைப் பற்றியும் துல்லியமாய்த் தெரிந்து வைத்திருப்பான்" ***

"படிப்பு அறிவைத் தரும்; அனுபவமும் அறிவைத் தரும். படிப்பதால் கிடைக்கும் அறிவு மதியாக இருக்கலாம். ஆனால், அனுபவத்தால் பெறும் அறிவில் உள்ள தெளிவு அதில் இருக்க முடியாது. அனுபவத்தால் பெறும் அறிவு உணர்ச்சி என்ற அம்மியிலே நம் மனத்தில் அழுத்தமாகப் பதியும் வண்ணம் அரைபடுகிறது". ***

"ஒருவரிடம் பழகும் போது, அவரை ஏற இறங்கக் கவனிக்க வேண்டும். அவர் பேசும் போது முகத்தையும், முக்கியமாக கண்ணையும், வாயையும் சேர்த்து கவனிக்கவேண்டும். நாம் கவனியாதது போலிருந்து, அவரது சின்னஞ் சிறு நடத்தையும் ஆராய வேண்டும். என்னதான் நடித்தாலும், சிலர் தம்மையுமறியாமல் வாய்தவறிச் சொல்லும் ஒரு சொல், அயர்ந்து மறந்து செய்யும் ஒரு செய்கை, நடக்கிற [illegible] இவைகளைக் கொண்டு ஆளைச் சரியாய் நிதானித்து விடலாம்". ***

"நிதானிக்கும் திறமையுள்ளவன், தன்னையும் பிறரையும் சரியாய் நிதானித்து மற்றவர்களைச் சரியாய் உபயோகித்து முன்னுக்கு வருகிறான். நிதானிக்க தெரியாதவன், படித்த முட்டாளாகவும், படியாத முட்டாளாகவும், மொத்தத்தில் கேவலமானவனாக வாழ்க்கையை நடத்தி எங்கும் புண்பட்டு ஏங்கி ஏங்கிச் [illegible]கிறான். அடிக்கடி ஏமாறுகிறான். கலங்கி மாள்கிறான். ***

"நாம் எந்த வேலையைச் செய்து கொண்டிருந்தாலும், நம்மோடு பழகும் நபர்களை நன்கு ஆராயும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். எதிராளின் சுத்தோற்றம்; உடை, பேச்சு, ஒவ்வொன்றையும் கூர்மையாகக் கவனித்து வர வேண்டும். எல்லாவற்றையும் ஒன்று எதையும் அசட்டை செய்து விடக்கூடாது. மிக அற்ப விஷயத்திலேதான் அந்தரங்க நோக்கம் வெளிப்படும்". ***